**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 906/ 2022**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வசந்தராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : | ஆண்டிச்சாமி | **Calling** | : | 10 வகுப்பு படிக்கிறேன் |
| **Village** | : | சிறுமலை | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 14 |
| | | | **Dated** | : | **08.04.2025** |

**08.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி–1 வசந்தராஜ் மனு Crl.m.p.No.14078/2024 உத்தரவின் பேரில் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 வது எதிரி ஆஜர்**
**1,3, 4, 5,6 எதிரிகள் ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

சாட்சி சம்பவசமயத்தின் போது 10 வயது சிறுவன் என்பதால் சாட்சியிடம் கீழ்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டது.

கேள்வி : நான் என்ன படிக்கிறேன்?

பதில் : MSP பள்ளியில் 10 வகுப்பு படிக்கிறேன்

கேள்வி: நான் எங்கு வந்துள்ளேன் என்றால்?

பதில் : நீதிமன்றம்

கேள்வி: நீதிமன்றத்தில் என்ன சொல்லவேண்டும்?

பதில்: உண்மையை சொல்லவேண்டும்

கேள்வி: அப்பா, அம்மா என்ன வேலை செய்கிறார்கள்?

பதில்: அப்பா இறந்துவிட்டார். அம்மா வேலை எதுவும் செய்யவில்லை

சாட்சி கூறிய பதில்களிலிருந்து அவர் சாட்சியமளிக்க தகுதியானவர் என்று தீர்வு காண்கிறேன்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

வனராஜ் எனது தாத்தா. பூமிராஜ் எனது சித்தப்பா. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள பாண்டியை தெரியும். அவர் எனது வீட்டிற்கு அருகே கடை வைத்துள்ளார். 06.04.2021ம் தேதி எலெக்சன் அன்றைக்கு இரவு 7.00 மணியிருக்கும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள பாண்டியின் மகன் மணி என்பவர் எங்கள் வீட்டிற்கு முன்னால் வந்து அசிங்கமாக கெட்ட வார்த்தைகளில் பேசி கொண்டிருந்தார்கள். அப்போது எனது சித்தப்பா பூமிராஜ் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார். நான் அந்த சமயத்தில் வீட்டிற்குள் இருந்தேன். எனது தங்கை ஹாசினி வீட்டிற்குள் இருந்ததால் நான் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. மணியும், அவருடைய தம்பி குட்டி மற்றும் மணியுடைய அம்மா ஆகியோர்கள் எனது சித்தப்பா பூமிராஜை குச்சியால் அடித்தார்கள். மணி அம்மாவை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவருடைய பெயர் தெரியாது. மணி சண்டை போட்டுவிட்டு எங்கள் வீட்டை நோக்கி கல் எறிந்தார். அந்த கல் என் கை மீது பட்டு எனது பாப்பா தலையில் போய் விழுந்தது. அதில் எனக்கு வலது கையில் காயம்பட்டது. (சாட்சி தனது வலது கையில் உள்ள காயதழும்பை காட்டி சாட்சியமளித்தார்.) திண்டுக்கல் மருத்துவமனைக்கு என்னுடைய சித்தப்பா கார்த்தி என்னை சிகிச்சைக்காக அழைத்து சென்றார். நான் கட்டுபோட்டு வீட்டிற்கு வந்தேன். திரும்பவும் இரண்டு முறை சென்று கட்டுபோட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW
Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.04.08 12:07:35 +0530

Judicial Magistrate No.I
Dindigul.